மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவிலெஜ்ஜை இரண்டு முறைகளில் எழுப்பலாம். ஒன்று, இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிக்கு, நேற்றோ, முந்திய நாளிலோ நடந்த நிகழ்ச்சிக்கு பிரிவிலெஜ் வரும். சில பிரிவிலெஜ்கள், உரிமைப் பிரச்னைகள் அப்பொழுதே நடப்பதைப்பற்றி வந்தால், மற்ற எல்லா அலுவல்களையும் நிறுத்திவைத்து அவை அப்பொழுதே விவாதிக்கப் படும். இதிலே எந்தவித பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

6. கவன ஈர்ப்பு

(அ) குமரி மாவட்டத்தில் பல தொடக்கப்பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமை குறித்து

THIRU J. JAMES : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the existence of many primary schools in Kanyakumari district without sufficient number of teachers since the Government have not sanctioned posts for many schools in both the Government and Private Managements, consequently students are not properly taught.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 7 கால் அட்டென்ஷன் நோட்டீஸ்கள் இருக்கின்றன. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி, இன்றோடு அவை முடிவதாக இருக்கிறது. இன்றோடு அவை முடிவதாக இருந்தால், இன்றைக்கே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். நாளைக்கு அவையை நீட்டிப்பதாக இருந்தால், நாளைக்கு 3 அல்லது 4 நோட்டீஸ்களை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சபையில் அலுவல் அதிகமாக இருக்கிற காரணத்தால், நாளைய தினமும் சட்டப்பேரவையை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாளை காலையில் வைத்துக்கொள்ளாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையும் பேரவை இருப்பதால் இன்றைக்கு 4 எடுத்துக்கொண்டு நாளைக்கு 3 எடுத்துக் கொள்ளலாம்.

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு உள்ளாட்சித்துறை மற்றும் தனியார் ஆரம்பப் பள்ளிகளில், இடைநிலை, இளநிலை, உடற்பயிற்சி ஆசிரியர், தொழிலாசிரியர் பணியிடங்கள் அரசினால் கொடுக்கப்பட்டே வருகின்றன. தேவையான பணிகள் அவ்வப்பொழுது கொடுக்கப்படுகின்றன. தற்பொழுது, வேலையில்லாத் திண்டாட்டத்தினை ஒழிக்குமுகத்தான், அரசு ஏற்படுத்தியுள்ள ஆசிரியர் பணியிடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பணியிடங்களை ஒதுக்கியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள்—

இடைநிலை—277

இளநிலை—30

உடற்பயிற்சி ஆசிரியர்—20

தொழிலாசிரியர்—70

மேற்கூறிய பணியிடங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர் எனக் கல்வித்துறை ஆய்வு அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் ஓரளவு அரசால் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிக்கை வாசிக்கும்போது பணியிடங்கள் ஓரளவுக்கு நிரப்பப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். எனக்குத் தெரிந்தமட்டில், இன்னும் பல பள்ளிக்கூடங்களில் 68 மாணவர்களை வைத்து, ஆரம்பப் பாடசாலைகளில், ஒரு ஆசிரியர் கல்வி கற்றுக் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. அதோடு உடல் பயிற்சி ஆசிரியர்கள், பல அரசாங்கப் பள்ளிகளில் 1,500 மாணவர்கள் இருக்கிற பள்ளிகளில் கூட, ஒரு ஆண் ஆசிரியரும், ஒரு பெண் ஆசிரியரும் மட்டும்தான் இருக்கிறார்கள். அரசாங்க ஆணைப்படி 250 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டும். அந்த முறையிலும் அமைக்கப்படவில்லை. அதோடு மலையாளம் படித்து, எஸ் எஸ் எல். சி. படித்து,

டிரெயினிங் பெற்ற ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். ஆனால், அரசாங்கத்தின் போஸ்ட் சாங்க்ஷன் வராததால், அவர்கள் இன்னும் சம்பளம் பெறாத நிலை இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் உணர்ந்து, மேலும் உடல் பயிற்சியாளர்களுக்கும், மலையாளம் படித்த ஆசிரியர்களுக்கும் போதுமான போஸ்ட்ஸ் சாங்க்ஷன் பண்ண அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கிய தொகைக்கு ஈடான ஆசிரியர் பதவியும், மத்திய திட்டத்தின் கீழும், மத்திய-மாநில அரசுகள் சேர்ந்து செய்கிற திட்டத்தின் கீழும் பாரபட்சமற்ற முறையில் எல்லா மாவட்டங்களுக்கும் கணக்கிட்டு, ஆசிரியர் பதவிகளை ஒதுக்கி இருக்கிறோம். தேவையான அளவு ஆசிரியர்களை ஒதுக்குவதற்கு நம்முடைய நிதிநிலை இடம் கொடுக்கவில்லை. கூடுமான வரையில் வாய்ப்பு தந்து வருகிறோம். மத்திய அரசு தந்து வருகிற ரூ. 98 லட்சமும் நாம் செலவழிக்கிற தொகையையும் சேர்த்து 10,500 ஆசிரியர் பதவிகளைத் தந்திருக்கிறோம். அதில் கிட்டத்தட்ட 6,000 ஆசிரியர்களையும் கிட்டத்தட்ட 2,000 தொழில் ஆசிரியர்களையும் நியமிக்கலாம் என்ற முறையில் பகிர்ந்து அளிக்கிற முறை இருக்கிறது. ஆகவே, தேவைகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வசதிகள் ஏற்பட்டதும் நிறைவேற்ற முடியும். சிலபல இடங்களிலே தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேர்த்து, மாவட்ட நிலைமைகளை ஆராய்ந்து, கணக்குக் கேற்றபடி தரப்பட்டிருக்கிறது.

(ஆ) சைதாப்பேட்டை தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் பெனிசிலின் ஊசி போடப்பட்ட திரு. சையத் காதர் என்பவர் மரணம் குறித்து

Dr. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely, the death of Thiru Syed Kadar of West Mambalam on Tuesday, 13th November 1973, due to administration of Penicillin injection in the E.S.I. Dispensary, Saidapet.